பொய்யாமொழி

ஆசிரியர்—ா. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந்திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981 ஐப்பசி 16 (1—11—50) புதன்கிழமை { மணி 10

3 NOV 1950
MADRAS
546
4-50

"பொய்யாமொழி"

இசை ஆக்கம்:-	இசை அமைப்பு:-
சிதம்பரம், எஸ். ராஜராமன்.	சிதம்பரம், எஸ். ஜெயராம்.
ராகம்—மிச்ர சிந்து.	தாளம் — ஆதி.

எடுப்பு

பொய்யாமொழி வள்ளுவன் தொகுத்த குறள் அமுதை
மெய்யாக ஓதிடுவோய் மனிதா நிதியெனும் கெதி பெறவே (பொ)

தொடுப்பு

தெய்வத் தமிழ் நாட்டின் சேதமுரு செல்வமிது
தேனும் பாலும் சேர்ந்த செந்தமிழ் ரசமிது (பொய்)

முடிப்பு

அறம் பொருள் இன்பமென்பது
அதற்குள்ள முப்பிரிவு
அதில் ஆயிரத்து முன்னூற்று
ஆறைந்து பாவின் செறிவு
அறைகுது அணுவை துளைத்தேழ்
அலைகடல் போல் பகுத்தறிவு
அதைக் கற்றுணர்வாயானல்
அடையலாம் மதிவிரிவு.

வார இதழ். ★ **விலை அணா 1.**

திருவும் - அறிவும்.

சொல்லேருழவன்.

★

(முன்தொடர்ச்சி)

பதத்தையும், அறிவையும் பிரித்துச் சோதித்தால் பலன் காண்பது அரிது. இப்பிரிவினால் நேரும் துன்பங்களை விதி என்று வேண்டுமானால் தப்பர்த்தம் செய்து கொள்ளலாம். கைகால் முதலிய அங்கங்கள் சண்டை போட்டுக்கொண்டு, வயிற்றைச் சும்மா போட்டுவிட்டு பிறகு புத்திவந்தது என்ற கதைபோலாகும்.

அறிவு படைத்தவனைக்கொண்டு யாரும் அருளை அடைய முடியாது அறிவு பிறரை காந்தம்போல் இழுக்கக்கூடியது. அப்படி அருளை அடையும் நிலையில் அறிவு இருக்காது. குறைபட்ட அறிவுதான் இன்பத்தைக் கண்டு அருளை அடையும், பிறர் நலத்தை சகிக்காது. திருவையும் அறிவையும் பிரித்துப்பார்ப்பதே மதியீனம். பூவும் மணமும் வேருகுமா? ஒளியும் மணியும் எப்படி வேருகும்? அறிவும் திருவும் நம் நாட்டில் பெரிதும் அமையாதது, வருந்தத்தக்க நிலை தான். "நாவின் கிழத்தி உறைதலால் சேராளே பூவின்கிழத்திப் புலந்து" என்டது பழய காலத்து மொழிதான். மாமியும் மருமகளும் ஒற்றுமை இல்லாதது அந்தக்காலம்! அதை இயற்கை என்று கூறமுடியாது. கல்வியும் செல்வமும் ஒருங்கே அமைந்த அமெரிக்கா, இரஷியா போன்ற நாடுகளில் இந்தப் பழமொழி செல்லுமா?

நான்கு குழந்தைகளையும் சமமாகப் பாவிக்கும் தந்தை சரும நோயுள்ள பிள்ளைக்கு மருந்து கொடுக்கும் போது நோயற்ற பிள்ளையும் அந்தக் கந்தக லேகியத்தை எனக்கும் கொடு. நான்மாத்திரம் பங்காளியல்லவா? என்றால் அந்த லேகியம் நோயற்றவனுக்கு பாதகம் நோயுள்ளவனுக்குத்தான் அவசியம், என்றோர் பெற்றோர் கூறினால், அதை நோயுற்ற பிள்ளைகள் மறுப்பதா? உடைகிழிந்த பிள்ளைக்கு உடை கேட்டால், ஆடை உள்ள பிள்ளையும் விகிதம் கேட்பதா? தாய் இறந்தவனுக்கு சமாதானம் கூறும்போது, ஊருக்கெல்லாம் தாய் அல்லவா இவ்வம்மையார். என்றார் ஒரு நண்பர். மற்றொருவர் முதல்வரிடம் மற்றொருநாள் மனைவி இறந்த துக்கத்தைச் சொல்லும்போது முற்கூறியதை காப்பியடித்து, அவ்வம்மை ஊருக்கெல்லாம் மனைவியல்லவா? என்றால் இதைவிட அறியாமை உண்டா உலகில். குதிரைக்கு குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரமா? அறிவுக்கு யாரும் தடைச்சட்டம் செய்யவில்லை. அறிஞர் என்பவர்கள்தான் சட்டத்தை வேண்டுகின்றனர் உள்ளபடி அறிவு இருப்பவர்கள் மன்றம் ஏறிவாதாட வேண்டியதில்லை. "பசிக்காதிருக்க வரந்தருகிறேன் கொஞ்சம் பழையது இருந்தால் போடுங்கள்" என்றானாம் ஒருவன். திருஇல்லாத அறிவு பயன்தராது. அறிவுதிருவுக்கு அடங்கித்தான் ஆகவேண்டும். சக்தி இல்லாமல் உலகம் ஏது? அறிவு ஒரு சமூகத்திற்குஅடகு வைக்கப்பட்ட பொருள் என்பது தவறு செல்வமும் பொதுவுடமைதான். அது சிலகால மாறுபட்டால் ஓரிடம் மிகைப்பட்டும், மற்றோரிடம் குறைந்தும் காணப்படும். அடிக்கடி இதை மராமத்து செய்யவேண்டும். அப்படி நடந்தே வருகிறது உலகில். மனித உடலில் இரத்தம் தடையின்றிச் சமமாக ஓடவேண்டும். ஓரிடம் அதிகமாகவும் மற்றோரிடம் குறைவாகவும் ஓடினால் நோய் உண்டாகி சரீரத்தையே கெடுத்துவிடும்; மனித சமூகம் எச்செல்வத்திலும் சமநிலை அடையாவிட்டால் சீரழிந்து கெட்டுவிடும் வள்ளுவர் நூலில் தனக்கு சாதகம் இருப்பதாக கட்டியளைப்பதில் என்ன பயன்?

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப் பொழுக்கம் குன்றக்கெடும்"

என்ற வள்ளுவர் குறள், ஒரு சந்தேகத்திற்கு உண்மையை விளக்குவதாகும். ஆனால் திரு ஒரு சமூகத்திற்கு உரியது என்பதை, நாம் கூறவில்லை. "நீ பிராமணனாய் இருந்தால் இவ்வளவு ரத்தத்தைக் கண்டு துடையை அசைக்காமல் இருப்பாயா"? என்று வீரத்திருவை உடைய கர்ணனைப் பார்த்து துரோணரே கூறி இருக்கிறார்; என்பதை அறிய வேண்டும்

அறிவுச்செல்வமும் ஆதிக்கச் செல்வமும் ஒரு சமூகத்திற்கு மிகைப்பட்டும், மற்றொரு சமூகத்திற்கு குறைவாகவும் பங்கீடு செய்தால் வகுப்புவாதம் உண்டாகிவிடுகிறது வகுப்புவாதம் செய்யும் சமூகத்தினர் வகுப்பு உரிமை கேட்பவர்களை வகுப்புவாதிகள் என்று கூறத்தலைப்படுகிறார்கள்.

அறிவைப் பரம்பரைச் சொத்தாகக் கொண்டவர் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் ஒரு சமூகம். லண்டனுக்குச் சென்று ஸ்டர்லிங் பிரச்சினையைத் தீர்க்க யாரை அனுப்பிவைத்தது என்பதை உணரவேண்டும். அறிவுத்திருவுடைய ராஜாஜி பொருளாதார இலாகாவை ஒப்புக்கொள்ளாதது ஏன்? என்பதை உணரவேண்டும் ஐ. நா. சபைக்குச்சென்ற கோபாலசாமி அய்யங்காரின் தடுமாற்றத்தைக் கண்டு ஐதராபாத் பிரச்சினையைத் தீர்க்க அறிவுத்திரு, வீரத்திரு முதலிய எல்லாத் திருவும் நிறைந்த ஏ. ராமசாமி முதலியாரை அனுப்பிவைத்து அந்தக்காரியத்தை வெற்றிகரமாக முடிக்கவில்லையா? நமது "பாரத சர்க்கார்! என்பதை உணரவேண்டும். அருளை முதலான குணங்கள் யாருக்குச்சொந்தம் என்பதை புராண இதிகாசங்கள் கூறும்? "பேராசைக் காரனடா பார்ப்பான்"............என்ற உங்கள் பாரதியாரின் பாட்டைக்கவனிக்கவும். —தொடரும்.

வாழ்த்துச்ம[...]

சி. சி. எல். பதி, உடையார்பாளையம்.

வையமக்களின் வனப்பு எல்லாம் வகையாய்
மெய்யாய்ச் செய்த பொய்யா மொழியது
செய்யாச் செயல்புரி சிறப்பே போன்று
துய்யா அப்பெயருடன் துலங்கும்
செயங்கொண்டத் தோன்றலே வாழி!
ஐயம்நீக்கி அறிவு கொழுத்தே!

அருமைப் 'பொய்யாமொழி'க்கு என்மனமார்ந்தவாழ்த்து

ஃ ஃ ஃ

G. நடராசன், குமிழியம்.

அன்பும் அறிவுமிக்க பொய்யாமொழி ஆசிரியர் அவர்கட்கு எனது அன்டார்ந்த வணக்கம்.

தங்கள் வார இதழைக்கண்டு மகிழ்கிறேன். பழமை மிகுந்த மடமை மக்களுக்கு வழிகாட்டியாக அமைத்திருக்கிறீர் இருட்டில் இருக்கும் ஓர் மனிதனுக்கு அங்கு ஓர் வெளிச்சத்தைக் கண்டால் அவன் மகிழ்வதுபோல் "பொய்யாமொழி"கண்டு நான் மகிழ்கிறேன். வாழ்க!

38

தொடர்ச்சி

காபாரதம்

வில்லிதரும் விளக்கம்,

ஆதிபருவம்] [குருகுலச்சருக்கம்

ஆசிரியர் U. S. இராமசாமிப் பிள்ளை செயங்கொண்டம்.

—:—

முன்பு கதைத்தொடக்கத்தின் முதற்செய்யுளைப் பற்றி ஆராய்ந்தோம். இப்போது அடுத்தசெய்யுளைப் பற்றி ஆராய்வோம், அச்செய்யுள்:-

"பொருந்தவானுறை நாட்களை நாடொறும் புணர்வோன்
அருந்த வானவர்க் காரமு தன்புடனளிப்போன்
திருந்த வானவர்க் கரியவன் செஞ்சடை முடிமேல்
இருந்த வானவன் பெருமையை யார்கொலோ இசைப்பார்"
என்பதாம்.

இதில் வானத்தில்உள்ள நட்சத்திரங்களைத் தினந் தோறும் சேர்பவனும். தேவர்களுக்கு உண்ண அமுதத்தைக் கொடுத்தவனும் சிவனது தலையில் இருந்தவனுமாகிய சந்திரனது பெருமையை ஒருவராலும் கூற முடியாது என அவன் சிறப்புக்கூறுகிருர்.

(இ-ள்) வான்—ஆகாயத்தை. உறை—இருப்பிடமாகக்கொண்ட, நாட்களை—நட்சத்திரங்களை, நாள்தொறும்—தினந்தோறும், பொருந்த—இசையுமாறு, புணர்வோன் — சேர்பவனும், அருந்த—உண்ண, வானவர்க்கு—தேவர்களுக்கு, ஆர்—சுவைநிறைந்த, அமுது—அமிழ்தம் என்னும் உணவை, அன்புடன்—பிரியத்துடன் அளிப்போன்—கொடுப்போனும், திருந்த—அழகுபெற, வானவர்க்கு—தேவர்களுக்கு, அரியவன்—அறிவதற்கு அருமையானவனுகியசிவனது செஞ்சடை—சிவந்த சடையையுடைய, முடிமேல்—தலையின்மீது. இருந்த—தங்கிய, வானவன்—சிறப்புடையவனுமாகிய சந்திரனது, பெருமையை—மேன்மையை, யார்கொலோ இசைப்பார்—எவரால் கூறமுடியும்? (ஒருவராலும் முடியாது) (எ-று)

(இதன்பொழிப்பு) ஆகாயத்தை இருப்பிடமாகக் கொண்ட நட்சத்திரங்களைத் தினந்தோறும் இசையுமாறு சேர்பவனும். உண்ணத்தேவர்களுக்குச் சுவைநிறைந்த அமிழ்தம் என்னும் உணவைப் பிரியத்துடன் கொடுப்போனும், அழகுபெறத் தேவர்களுக்கு அறிவதற்கு அருமையானவனுகிய சிவனது சிவந்தசடையையுடைய தலையின்மீதுதங்கிய சிறப்புடையவனுமாகியசந்திரனது மேன்மையை எவரால்கூற முடியும்? ஒருவராலும் கூற முடியாது என்பதாம்.

குறிப்பு:- இச்செய்யுளில் மூன்று வரலாறுகள் குறிப்பிடப்படுகின்றன. அவை சந்திரன் நட்சத்திரங்களைச்சேர்தல், தேவர்களுக்கு அமிழ்தம் கொடுத்தல் சிவனதுதலையில் தங்கியதுஎன்பவை இவற்றுள் முதலாவதும் மூன்ருவதும் தொடர்புடையன. இது பின்வரும் வரலாற்ருல் விளங்கும். அவ்வரலாறு:-

சந்திரன் தக்ஷமுனிவனது புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்களையும்மணஞ்செய்து கொண்டு அவர்களுள் உரோகிணிஎன்பவளிடத்துமிகவும் காதல்கூர்ந்து அவளுடனே எப்பொழுதுங்கூடிவாழ்ந்திருக்க மற்றைமகளின் வருத்தத்தைநோக்கி தக்ஷமுனிவன்சந்திரனை "க்ஷயமடைவாயாக" என்று சபிக்க அச்சாபத்தாற்சந்திரன் பதினைந்து கலைகளுங்குறைந்து மற்றைக்கலை ஒன்றையும் இழப்பதற்கு முன்னம் சிவபெருமானைச் சரணமடைய அப்பெருமான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக்கலையைத் தன்தலையிலணிந்து மீண்டுங் கலைகள் வளர்ந்துவரும்படி அநுக்கிரகித்தனன்என்பதாம்

தேவர்களுக்கு அமிழ்தம் கொடுத்தல் என்றதில் அடங்கிய வரலாறு.

திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்தில் அதனினின்று உண்டான பலபொருள்களுடனே அமிழ்தமும், விஷமும் சந்திரனும் தோன்ற அவற்றுள் அமிழ்தத்தைத் தேவர்களும் விஷத்தைச்சிவனும் உண்டனர். சந்திரன் அமிழ்தத்துடன் உதித்ததனுல் அவன் கிரணங்கள் எல்லாம் அமிர்தமயமானவையாதலால் "அருந்த வானவர்க் காரமுத அன்புடன் அளிப்போன்" என்று கூறப்பட்டது.

இவ்வரலாறுகளை எல்லாம் ஆராயின் அவை ஆராய்ச்சிக்குப்பொருந்துமா? என்பது சிந்திக்கற்பாலது.

[தொடரும்]

ஆ. கு:- சந்திரன் பிறப்புப் பற்றியபல பொருந்தாக் கூற்றுக்களில் இதுவும்ஒன்று ஆனல் இம்மாதிரி தேவர் மூர்த்தி இவர்களின் ஒருஉற்பத்தியை மற்ருென்று ஒப்புக் கொள்வதில்லை முரண்பாடான கருத்துகொண்டவை தான் முற்றிலும்.

ஆசிரியா—

★ கண்கவர் வனப்புடைய கைத்தறி ஆடைகள்..!! ★

நேர்த்தியான ரகங்கள்! ★ விலை நயம்! ★ 80, 100 நெ. கலர்கள் &
நீடித்த உழைப்பு!! ★ என்ன? ★ அசல் வெள்ளி சரிகை
நவ நாகரீகத்திற் கேற்ப ★ ★ உத்திரவாத முடைய ★
அழகிய பார்டர்கள்! ★ எங்கே? ★ சேலைகள் வேட்டிகள்.

ஜெயங்கொண்டசோழபுரம்
★ கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில் கிடைக்கும்.! ★

கூட்டுறவை ஆதரித்து தொழில் நலம் பெருக்குங்கள்..!!

பொய்யாமொழி
ஆசிரியர்: ந. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, ஐப்பசி 16 புதன். { மணி 10

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார் "

உயர்ந்த ஒழுக்கம் நிறைந்த வாழ்வையடைய இறைவனைப் பின்பற்றாதவர் பிறவியில் ஏற்படும் துன்பங்களைக் கடக்க முடியாது என்பதாம்.

முன் சொன்ன ஒன்பது பாட்டுக்களாலும், உலகு காண முதன்மையான ஒளியைக் கொண்டவன், வாலறிவன் — மலர்மிசை ஏகினன் — தனக்குவமையில்லாதவன் — வேண்டுதல் வேண்டாமையிலான் — பொறிவாயிலைந்தவித்தான் — அறவாழி அந்தணன் — எண்குணத்தான் என்பனபோன்ற விளக்கங்களால் இறைத்தன்மை இன்னதென விளக்கப்பட்டது.

உயர்ந்த ஒழுக்கம் நிறைந்தவாழ்வு எப்படிப்பட்டதென்பதையே நாம் இதுவரை காண்கிறோம. அதுவே இறைவாழ்க்கையுமாகும்.

மேற்கண்ட குணங்களை மக்கள் தன்னிடத்தே கொண்டு நடப்பதற்கு இறைத் தன்மையை விளக்கியுள்ளார். இறைவனை அப்பாற்பட்ட மற்றொரு பொருளாக (தனி ஆற்றலாக) காட்ட திருவள்ளுவர் விரும்பவில்லை.

மக்கள் மாசுபடாமல் வாழ, பஞ்சமாபாதகங்கள் நிகழும் வழிகளை வாழ்க்கையில் மறுப்பதற்குறிய எண்குணங்களையும் மக்கள் தன்னிடத்தே கொண்டு நடப்பதே இறைவனடி சேருதற்கு முக்யத்வம் என்பதை பத்து பாட்டுக்களாலும் உணர்த்தியிருக்கிறார் என்பது (கடவுளை வணங்குவது மக்கள் தூய அறநெறியைப் பின்பற்றுவது) காண்க.

நாட்டு நிலையும் - நல்லறிவும்

★

இன்று நமது நாட்டின்கண் பல்வேறு அரசியல் பொருளியல் சமுதாயஇயல்கட்சிகளும் பொது மக்களின் முன்னேற்றமென்ற குறிக்கோளைக் கொண்டதென்று செல்லுவதில் எந்தக் கட்சிக்காரர்களும் தவறுவதில்லை. ஏதோ தங்கள் தங்கள் கட்சிகளும் நன்மை செய்வதே நாட்டம் கொண்டதென்பதை பொது மக்களிடம் எடுத்து தங்கள் கட்சியின் செ... எடுத்து விளக்கி மக்களிடம் ஆதர... தங்கள்கட்சியில்அதிகமக்கள்சேரு... புரிந்து வருகிறார்கள். ஒவ்வொரு கட்சி தலைவர்களும், கட்சியை பின்பற்றுபவர்களும் சிறந்த அறிவாளிகளும் தேசமக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென அக்கரைகொண்டவர்களும்தான்.

ஆனால், பொது மக்களாகிய பாமர மக்கள் ஒவ்வொரு கட்சியாளர்கள் சொல்லும் சொல்லை அதிலுள்ள நியாயத்தை தங்கள் தங்கள் நிலையும் தாங்கள் கையாண்டுவந்த பழக்க வழக்கத்தையும் முன்நிறுத்தி பிரசாரக்காரர்கள் தங்களுக்கு எடுத்துச்சொல்லும் நலமானது வாழ்க்கையில் பொருளாதார சுபிக்ஷம் முதலிய மேன்மையடைய வேண்டியவைகளைச் செய்வதாக சொல்லும்போது அந்தகட்சியின் பேரில் பற்றுக்கொள்ளுகிறார்கள். மற்றொருபுரம் தாழ்த்தப்பட்டவர்கள் கல்வியில், பிற்போக்கில் பாமரராய் பிறவியில் அடிமையாய் வாழுவதை எடுத்துச் சொல்லும்போதும் எண்ணும்போதும் தான் பிறந்த இனத்துக்கொரு இழிவு இருப்பதை நினைக்கும்போது ஏன்? எப்படி? யாரால்? எப்போது இப்படி உண்டாயிற்று என்றும் இயற்கையின் கூறுபாடா? செயற்கையின் வேறுபாடா? என்று சிந்திக்கும்படி மக்களிடம் எடுத்துச் சொல்லியதை செவி மடுத்து மக்கள் அதில் பற்றுக்கொள்ளுகிறார்கள்.

சுதந்திரத்தால் ஏழ்மையும், தாழ்மையும் ஒழியுமென்று எண்ணியமக்கள் தங்கள் தங்கள் மேநிலை எய்த எந்தக்கட்சிகளின் கொள்கை உகந்ததோ அதை மக்கள் பின்பற்றி ஆதரவுதர ஆரம்பிக்கிறார்கள். மற்றொரு பக்கம் ஆண்டான் அடிமை முறையை அப்படியே நிலைத்திருக்க எண்ணங்கொண்ட, வருணாச்சிரம தர்மத்தை காப்பாற்றினால்தான் முடியுமென எண்ணுபவர்களும் அதற்கிசைபவர்களும், அதை பின்பற்றுகிறார்கள். இப்படியே போய்கொண்டிருந்தால் மக்களினம் ஒத்துவாழ, சமத்துவம் தழைக்க சகோதரத்துவம் நிலைக்க, நாடும் நாட்டுமக்களும் முன்னேற இத்தியாதிகாரியங்களால் முடியுமா? அராஜகமும், குழப்பமும் ஏற்பட்டு மக்களினம் அழிந்து ஒழிந்து மற்றையநாட்டவர்கள் பார்த்து கைகொட்டி நகைக்க ஏதுவாகுமேயொழிய நன்மைபயக்குமா என்பதை ஒவ்வொரு அரசியல் பொருளியல் சமுதாயஇயல் கட்சிகளின் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் சிந்தித்தற்குறியது.

[torn] ...மையான கடமையுமாகும். ...ப்பாக ஏனைய கட்சித்தலைவர்கள் சிந்தித்... முடியுமா? முடியாது. ஆட்சி பீடத்திலமர்ந்திருப்பவர்களும், அதற்குறிய ஒவ்வொரு மாகாண காங்கிரஸ் தலைவர்களும் அதில் தலையாய சிரத்தை காட்டவேண்டும். ஒரு நாட்டில் பல்வேறு கட்சிகளிருப்பினும் ஆட்சி பீடத்தமர்ந்தவர்கள் நடுநிலை வகிக்கவேண்டுமேயொழிய தங்கள் கட்சி என்றதை மனதில் வைத்து மாற்றுக் கட்சிக்காரர்களை ஆட்சியில் உள்ள படைகளைகொண்டு அழிப்பதும், ஒழிப்பதும், ரத்தம் சிந்தச்செய்வதும், உயிரை தன்மானத்தை போக்கும்படி தகாத செயல் புரிவதும் நேர்மையற்றதும் வெட்கப்படக்கூடியதுமாகும்.

சுதந்திரம் பொது

நாம் ஒரே இன மக்கள். நாடு சுதந்திரமடைந்தது நாட்டு மக்கள் எல்லோருக்குமேயொழிய ஒருகட்சிக்காரர்களுக்கு என எண்ணுதலோ, அதற்குறிய செயலை செய்தலோ, தர்மத்திற்கும் நியாயத்திற்கும் உடன்பாடுடையதல்ல. இதை ஏன் சொல்லுகிறோமெனில் ஒவ்வொரு கட்சியிலும் உணர்ச்சியால் உந்தப்பட்ட வீரர்களும் வீராங்கணைகளும் ஏராளமானவர்கள் உள்ளார்கள் வெள்ளம் தடுத்தலரிது. தடங்கரை பேர்த்துவிடுதல் அரிதல்ல சுதந்திரத்திற்காக சிறை சென்று தடியடிபட்ட பலவீரர்கள், வீராங்கணைகள் எல்லாரும் நாட்டிலிருக்கிறார்கள். அவர்களின் செயற்கறிய செயலை வீணே பாழ்படுத்துதல் அறிவுக்கொவ்வாத செயல்.

வாழையாடினாலும், முள் ஆடினாலும் சேதம் வாழைக்குத்தான். எந்தவிதமான அராஜகம் குழப்பம் ஏற்படினும் நமது நாட்டுமக்களின் அழிவை நோக்கிச் செல்லுவதுதான். சிறுகிராமங்களில்கூட ஏற்படும் சண்டைகளை ஒரு சிலதைவேண்டிய நியாயத்தை எடுத்துக்கூறி பலபெரியவர்கள் அதிலும் பாமரர்கள் படிப்பற்றவர்கள்கூடி சமாதானப்படுத்தி விடுகிறார்கள். அப்படியிருக்க பல அயல்நாடுகளையும், ஆராய்ச்சிகளையும் கண்ட பேரறிஞர்கள் அறிஞர்கள் செய்யவேண்டிய கடமை என்ன ஆளும் கக்ஷியினர் மற்றக்கக்ஷியின் தலைவர்களை கூட்டி தங்கள் கக்ஷியின் கொள்கை கோட்பாடுகளை கூறும்படிசெய்து நாட்டுக்குகந்த நன்மை தரக்கூடியதும் மக்களின் பெரும்பான்மையினர் நிலைக்கேற்ப திட்டங்கள் வகுத்து முறையே 3-வருடம் 5 வருடம் என்று திட்டங்களாக அமைத்து சர்வகக்ஷியின் அம்சங்களையுங்கொண்டு சிறந்த முறையை மக்களிடம் ஒரேமுகமாய் எடுத்துக்கூறி மக்களை சீர்திருத்தமடையச் செய்தால் நாட்டுக்கு நன்மைசெய்ய முடியுமேதவிர அதிகாரபலம், ஆணவபலம் இதுகளை மூலபலமாகவைத்து நாட்டை ஆள எண்ணினால் அவ்வாட்சி நீடூழி நிலைத்திருக்கவகை ஏற்படாமற் போவதுடன் பலஜாலியன் வாலாபாக்குகளும் நிகழும்.

தொண்டர்களும், தலைவர்களும்

பழைய ஏகாதிபத்திய முறையைக் காப்பியடித்த மாதிரி தலைவர்களின் சொற்திறன் மூலமாய் ஏற்படும் கிளர்ச்சியில் வீறுகொண்ட தொண்டர்களை நாயடிப்பதுபோல் மாட்டையடிப்பதுபோல் மிருகத்திலும் கேவலமாய் நடத்திவருவதும் நியாயமா? ஒரே 153 A. செக்ஷனுக்கு தலைவர்களை யதொரு நிபந்தனையன்னியில் விடுவிப்பதும், தொண்டரில் சிலரான A. V. P. ஆசைத்தம்பி போன்ற சில முக்கியஸ்தர்களை அதே சட்டத்தின்கீழ் மொட்டையடிப்பதும் சிறையினின்றி விடாததும் என்ன நியாயம்? இதுதான் சட்டத்தின் முன்னர் எல்லோரும் சமம் எனும் செயலா.

அம்பை முறிப்பது, எரிப்பதுபோல் மாற்றுக்கக்ஷிக்காரர்களின் நியாயா நியாயத்தை ஆட்சி பொறுப்பேற்றிருக்கும் சிகரங்கள் பொறுமையுடன் சிந்தித்து நல்ல முடிவுகாணுமல் அராகஜத்தால் வீணே ஏழை எளியவர்களையும் வதைப்பதால் மகனை இழந்த தாயையையும் தந்தையையும் கணவனையிழந்த கைம்பெண்ணையும் முன்னாள் சுதந்திரப்போரில் கண்டுகலங்கியது போதாதென்றுமேலும் தொண்டர்களையே இம்சைக்காட்படுத்துவது ஆளும்கக்ஷியினர் செய்யும் அடாத செயலாகும்.

எப்படியெனில் முன்கூட்டியே ஒருமகாநாட்டில் தி. மு, கழகத்தார்களும். தி. கழகத்தார்களும் அறிவித்திருக்க அதை தலைவர்களிடம் நேரில் விளங்கச்செய்து தங்கள் விளக்கங்களை கூறி தடுத்திருக்க வேண்டுமேயொழிய அப்போதெல்லாம் ஒன்றுமறியாதவர்கள் போலிருந்து பதுங்கிப்பாயும்புலிக்குணம்போல் நாட்டுமக்களை நாசமாக்க எண்ணுவதும் பல அரியபெரிய தாய்மார்களையும் பல மதிப்புக்குரிய பெரியார்களையும் பொது மக்களையும் அவதிக்குள்ளாக்கி இம்மாதிரி கொடுமை புரிவது என்ன நேர்மை.

உதாரணமாக கிராமாந்திரங்களில் ஒருவன் தன் மனைவியை மற்றொருவன் பல அடியாட்களைச் சேர்த்துக்கொண்டு அழைத்துசெல்ல ஏற்பாடு செய்திருக்கிறான் என்றுசொல்லுவானேயானால் அவனை அழைத்துபோனால் தான் போய் சிலநாள் கழித்துத்தான் கேஸ்போட சட்டம் இடங்கொடுக்கும், எதிரிபேரில் என்று சொல்லுவார்கள். இதற்குள் ஒருவர்க்கொருவர் குத்தி கொலை செய்துகொண்டபிறகுதான் கேஸ்போடுவதற்கு சட்டம் இடம்தரும்; அதுபோல் முன்னரே தெரிவித்திருந்த அவர்களை சட்டமீறுதலானால் தடுத்திருக்கவேண்டும். சட்டத்துக் குட்பட்டதானல் அவர்களுக்கு தக்கபாது காப்பளித்து நடத்த இடந்தர வேண்டுமேயொழிய அதற்கு மாறாய் தடியால் அடிப்பதற்கும் துப்பாக்கியால் சுடுவதற்கும் வேண்டியதை செய்துவிட்டு ஆதாரங்களை பின்னர் தயார்செய்யுமுறையில் கல்லாலடித்ததற்காக கலகம் விளைவித்ததற்காக அடிப்பது, சுடுவதுபோன்ற கொடுமை ஏற்பட்டது என்று சொல்லுவதும் கலகம் செய்ய இடம் தருவதும் நீதிக்கோ நேர்மைக்கோ உரியதல்ல.

வீணே இந்நாட்டு வீறுகொண்ட இளங்காளைகளை தாய்மார்களை ரத்தக்களறியால்கொடுமையான காரியங்கள் நடைபெற விட்டுக்கொண்டே போவது தலைவர்களுக்கும் அழகல்ல. அதற்கு ஜவாப்தாரியான ஆளும் கக்ஷியினர் அமைச்சர்களும் வேடிக்கைபார்ப்பது விபரீதம் உடனே சர்வகக்ஷி தலைவர்களையும் ஆட்சியாளரும் ஆளும்

வாய்ப்பைப்பெற்ற காங்கிரஸ் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் ஒன்றாய்கூடி நல்லதொரு முடிவைக் காணுங்கள்;

இந்த அராஜக அலங்கோலத்தைக்கண்டு மக்கள் கொதிப்படையாமலிருக்க வழி தேடாமல் அதைவிட்டு முன்னமிருந்த கொடிய ஜாதித்துவேஷம் தலைவிரித்தாடியது போய் இப்போதுமாறி கக்ஷித்துவேசமாய் மாறி அதுமண்டைகொண்டுபோனதுடன்நில்லாது நல்ல உள்ளத்தோடு மாற்றுக்கக்ஷியினரை எண்ணும் மனப்பான்மையொழிந்து கருவொடு நின்றேடொன்று காரணமின்றிச்சீறி போர்செய்ய எண்ணிய கொம்பை முறுக்கிவிட்ட குறும்பூழ் மாதிரியாகஒவ்வொரு தலைவர்களும், அதில் குறிப்பாக நமது தமிழ்நாட்டுத் தலைவர் உயர்திரு. காமராஜ் நாடார் அவர்கள் தங்கள் கட்சிக்காரர்களை தியாகிகளுக்கு கட்டளையிடுகிறுர் தங்கள் கட்சிகள் பற்றி பிரசாரம் செய்யும்படி ஏவுகிருர். ஒரு சிலர் மக்களிடம் சொல்லுவதுபோல் தியாகிகளுக்கு வீரமான்யம் கொடுப்பதுகூட இன்றையவரையிலும் மறுபடியும் கட்சியிலேயே மாற்றுக்கட்சிக்காரர்களோடு மற்போர், சொற்போர் புரியவே வைத்துள்ளார்கள்.

காங்கிரஸ் தியாகிகளை என்றும் இழித்தும் பழித்தும் பேசும் நிலைமைக்கு ஆளாக்க வேண்டாம். அருமை தியாகிகளையும் மாற்றுக்கட்சித் தொண்டர்களையும் வீணே பழிக்கு ஆட்படுத்தாமல் மகத்தானசேவைசெய்து மகாத்மா காந்தியடிகளால் போதித்த அஹிம்சையை மனதிற்கொண்டு நாம் ஒரு காலத்தில் எந்தெந்த செயல்களைக் கண்டித்தோமோ அதை ஒதுக்கி விடுத்து சமசந்தர்ப்பமளித்து நாட்டு மக்களை நன்மையுறச் செய்யுங்கள் பொறுமையையும் அறிவையும் இழத்தல் தகாது ஆவன செய்ய முயலுங்கள். பழியை ஏற்காதீர்கள் நாடு நலங்குலையும். நாட்டுமக்கள் நாசமடைவர்என்பதை எண்ணுங்கள். அன்பர்களே பொதுமக்களே சிந்தியுங்கள்

சந்தாதாரர்களுக்கு

இதுவரை சந்தா அனுப்பாத நேயர்கள்உடனடியாக அனுப்பிவைத்து ஊக்குவிக்க கேட்டுக்கொள்ளுகிறேம்.

—ஆசிரியர்

— 8ம் பக்கம் தொடர்ச்சி —

5. வியாபாரிகள் தங்களிடமுள்ள கலர் நால் ஸ்டாக்குகளை கமிட்டியில் கணக்கு கொடுப்பதென்றும் ஒவ்வொரு மாதமும் கலர் நூல் வரும் கணக்கை வைத்து தரிகாரர்களுக்கு சம பங்காய் பிரிப்பதென்றும் வெள்ளையும், கலரும் ஒவ்வொரு தரிக்கும் சேர்த்து பிரித்து கொடுப்பதென்றும்,

6. 80 நெ. நெசவு செய்யும் தரிகள் 1250 தரிகளிருப்பதால் மில் டெப்போ பிராஞ்சு ஜெயங்கொண்டத்தில் வைத்தாவது அல்லது 6¼ பர்சண்ட்டு லாபம்வைத்தாவது ரீடயல் வியாபாரிகளிடம் கொடுத்தாவது தரிகாரர்களுக்கு ஜெய்ங்கொண்டத்திலேயே கொடுக்க ஏற்பாடு செய்ய வேணுமென்றும்.

7. மேலே கண்ட தீர்மா... D. C. C. அவர்களை வியாபாரிகள் சங்க ... டேஷன் போய் Low Count 20—40 வரை ... தரிகளுக்கும், 60 முதல் 100 வரை உள்ள 1... தரிகளுக்கும் மாதாமாதம் வேண்டிய நூல்களை வழங்கும்படி கேட்க சங்கத்தாரை போகும்படி கேட்டுக்கொள்ள தீர்மானிக்கிறது.

ஆசிரியர் குறிப்பு உ. தாலுக்காவில் தற்காலம் வரும் நூல்களில் கலர் நூல் நெய்பவர்களுக்கு வெள்ளை நூல் தேவையற்றது வெள்ளை நூல் நெய்பவர்களுக்கு கலர் தேவையற்றது என்பதை சம்மந்தமுள்ள அதிகாரிகள் உணர்ந்து செய்தால் ஒரு நூல் மற்ற நூல் காரருக்கு B. M. க்கு போகாமலிருக்கும் இரண்டும் கலந்தால் வெள்ளை B. M.க்கு ஏற்படாகும்.

விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி
வசூல் விபரம்.

திருவாளர்கள்,	ரூ. அ. பை
V. S. தங்கவேல் பிள்ளை அவர்கள், விக்கிரமங்கலம். ஓர் கட்டிடம் கட்டித் தருவதாக வாக்களித்திருக்கிருர்,	
க. கோவிந்த வைத்தியர், அம்பாப்பூர்.	100—0—0
செல்லமுத்து ஆசிரியர், கீழநத்தம்.	25—0—0
R. ஆறுமுகம் அவர்கள், அரியலூர்.	10—0—0
இரா. ராமராஜ் கல்லூரி மாணவர், குடந்தை.	5—0—0
முன்வார வசூல்	260—0—0
ஆக ...	400—0—0

நிதி அனுப்பவேண்டிய விலாசம்:

A. R. சீனிவாசன்,
காரியதரிசி,
விக்கிரமங்கலம் நடுநிலைப்பள்ளி கட்டிடக் கமிட்டி,
அம்பாப்பூர், குணமங்கலம் P. O.

ஓர் நற்செய்தி!

—:!:—

விக்கிரமங்கலம் சந்தையில்
தீபாவளிக்காக வேண்டி ஜவுளி முதலிய
சகல சாமான்களும் கிடைக்க ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்து கொள்ளுகிறேன்

வியாபாரிகளும் பொதுமக்களும்
இச்சந்தர்ப்பத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவும்.

இப்படிக்கு.
A. R. சீனிவாசன்.

N. B:- சந்தை சனி வாரம் தோறும்.

...யப்பன்

குடந்தை, ஆண்டியப்பன்.

★

[முன் தொடர்ச்சி]

மணமாகி பன்னிரண்டு வருடமாகியும் மக்கட் பேறு இல்லை. மழலை மொழி கேட்க ஒரு மகவு இல்லை. எஞ்சிய நேரங்களில் கொஞ்சிக்குலாவ ஒரு குழந்தை இல்லை. என்ன செய்வார்கள் பாவம்!

தமிழ் நாட்டிலே எத்தனைப் புண்ணிய—புராண கோவில்கள் இருக்கிறதோ அத்தனையும் சுற்றிவந்து விட்டார்கள் அரசு சுற்றிச்சுற்றி அம்மையார் இளைத்தது தான் கண்டபலன் போகாத ஊரில்லை. வேண்டாத ஆண்டவன் இல்லை. கல்லைக்கண்ட பக்கமெல்லாம் கை கூப்பி வணங்கி காணிக்கையும் செலுத்தலானார்கள். என்ன செய்வது அப்போதும் பலனில்லை. அவர்களுக்கு அது இல்லை. ஆனால் பிள்ளையின் பேப்பர் செல்லத்துக்கோ மூன்று குழந்தைகள். நவரத்தினமாலை மாதிரி நல்லழகுடனே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தன. ஆனால் இது கவைக்கு உதவுமா? என்ன இருந்தாலும் சொந்தமனைவிக்கு குழந்தையிருந்தால்தானே சொத்துரிமை தருகிறது இந்நாடு. சொந்தத்தில் பிறக்கும் குழந்தையிடம் இருக்கும் அன்பைவிட மட்டமாகத்தானே இருக்கும் சொகுசுக்காரியின் குழந்தைகள் மீது

பத்ரகாளியை வெள்ளியிலே செய்து தன் வீட்டிலேயேவைத்து பூஜித்துகூட பார்த்தார் பரமசிவம் பிள்ளை. பழக்கம் தவறாமல் வழக்கம்போல வருடா வருடம் பத்ரகாளிக்கு உற்சவம் நடத்தினார் ஊரறிய காளிக்கு காணிக்கையாய் கடாக்கள் வெட்டினார் இவ்வளவும் எதற்காகச் செய்தார் தனக்கொரு பிள்ளை வேண்டுமே என்ற எண்ணத்தால் தானே! ஏற்பட்டதா? இல்லை. எப்படி ஏற்படும். அங்கே அது இல்லை. எங்கே எதுஇல்லை என்று கேட்கிறீர்கள்! அதுதான் ... ... விஷயங்களை அறிந்துபார்க்க, பகிர்ந்துணர பகுத்தறிவு இல்லை. பழமையிலே தோய்ந்து பழக்கமானவருக்கு புதுமையைப்பற்றி என்ன புரியப் போகிறது?

“சாமிகளை” வேண்டினால் மட்டும் “சந்தானம்’ உண்டாகுமா? உண்டாகுமென்றால் ஏனில்லை? பரமசிவம் பிள்ளைதான் ஆண்மை, அற்றவரா? அப்படியிருந்தால் பேப்பர் செல்லத்துக்கு எப்படிப்பிறக்கும் குழந்தைகள்? பிறந்திருக்க முடியுமா? பாக்கியம்தான் மலடியா? அல்ல இவரின் மதியிலே விரிவு இல்லை. வேண்டினால் உண்டாகும் குழந்தை என்ற எண்ணத்தைத்தவிர வேறு விஞ்ஞான வழியில் இவரின் எண்ணம் செல்லவில்லை. வேண்டி வேண்டி உடலை வீணாக்கிய இவர்களுக்கு குழந்தை ஏன் ஏற்படவில்லை. வேண்டாதிருந்த செல்லத்திற்கு மட்டும் குழந்தை உண்டாவானேன். பரமசிவம் —பாக்கியம் இவர்களின், ரத்தம் சோதனைக்குரியது. பரமசிவத்தின் வடிவத்திலே சில வடிவங்கள் குறைந்திருந்தது. அதனால் குழந்தை ஏற்படவில்லை இது தெரியாமல் கோவிலை சுற்றி வந்துவிட்டால்மட்டும குழந்தை உண்டாகிவிடுமா? மதியற்ற மடமை நிறைந்த செயலல்லவா இது? இதைஎடுத்து விளக்க பரமசிவத்தை நாடிஅன்றுஒரு இளம்வாலிபன்வந்திருந்தான் பரமசிவம் பிள்ளையிடம் பாக்கியத்தம்மாளும் பக்குவமாக அவனை வரவேற்றனர். பரமசிவம் பிள்ளையை தனியாக அழைத்து தாங்கள் கோவிலுக்குச் சென்று பயனில்லை— பலனுமில்லை நீங்கள் வேண்டியே காலத்தை வீணாக்கி விட்டீர்கள். இனியாவது விஞ்ஞானத்தை நாடுங்கள் என்று கூறினான் விஞ்ஞானமே உங்களின் வெம்பிய உள்ளத்திற்கு வேதனையைப் போக்கும் அருமையான கருவி இனியேனும் உங்கள் ரத்தத்தை டாக்டரிடம் பரிசோதியுங்கள் என்று மறுமுறையும் மொழிந்தான்.

முதலில் நம்பவில்லை பிள்ளை ஏதோ உளறுகிறான் என எண்ணி சும்மாயிருந்துவிட்டார் பிள்ளையவர்கள், மாதங்கள்இரண்டு மறைந்தன தம்பிசொன்னதைச் செய்து பார்க்கலாம் என எண்ணி செங்கற்புட்டிலே உள்ள டாக்டர் கன்னியப்பன் அவர்களிடம் தன் நிலையைச் சொன்னார் கன்னியப்பனும் மிகவும்கவலையோடு அவரின் சோகக் கதையைக்கேட்டுக் கொண்டிருந்தார் தங்களின் கவலையை தான் போக்குகிறேன் எனவாக்கும் கொடுத்தார் மறுநாள் காலையில் பரமசிவம் பிள்ளையின் ரத்தம் கன்னியப்பனால் பரிசோதிக்கப்பட்டது அதே நேரத்தில் கன்னியப்பன் ஆஸ்பத்திரியுள்ள நர்ஸ் களாயினியால் பாக்கியத்தின் ரத்தமும் பரிசோதிக்கப் பட்டது முடிவில் பிள்ளையின் ரத்தத்தில் சில பாக்டீரியாக்கள் குறைந்ததினால்தான் பிள்ளை இல்லையென்றும் ஒருமாதம் இவ்விடமே தங்கி இன்ஞ்செக்ஷன் செய்து கொண்டால் ஏற்படும் குழந்தை என்றும் கூறினார் கண்ணையிழந்தவன் மீண்டும் ஒளி பெற்றதுபோல் கவலை தோய்ந்த பிள்ளையின் முகம் சந்தோஷத்தால் பூரித்தது கன்னியப்பன் சொல்படி ஒரு மாதம் இருப்பதாக ஒப்புக் கொண்டார்.

செங்கற்பட்டிலே தனியாக ஒரு பங்களாவை பிடித்து அதிலே இருந்து வந்தார்கள். உருண்டு ஓடின மாதங்கள் நான்கு இப்போது பரமசிவம் பிள்ளையின் பாரியாள் பாக்கியம் மூன்றுமாத கற்பிணி என்ன சொல்கிறீர்கள்? பாக்கியம் மலடியா? அல்லது பரமசிவம்தான் ஆண்மை வீரமற்ற வெறும் ஆளா? ஊரே ஆச்சர்யப் பட்டது. மின்னி மறைந்தன ஒரு சில மாதங்கள். அவர்களின் இதயங் குளிர பிறந்தது ஆண் குழந்தை. ஏக ஆடம்பரத்தோடு பேருரை தோரணங்களால் அலங்கரித்து ஊர்மக்கள் எல்லோருக்கும் விருந்துவைத்து மேளதாளத்தோடு அன்று குழந்தைக்கு பேர் வைத்தார்கள் “கன்னியப்பன்” என்று தங்களது கவலையை தீர்த்த அந்த புண்ணியசீலனின் பெயரையேசூட்டினார்கள் இனியேனும் விழிப்புறுங்கள்! விஞ்ஞானத்தையொட்டி வாழுங்கள் விவேகத்தோடு!

உங்கள் வியாபாரம் செழிக்க —
— பொய்யாமொழியில்
— விளம்பரம் செய்யுங்கள்!

செய்திகள்.

வேண்டுகோள்.

விவசாய உழைப்புத் தொழில், இயந்திரத் தொழில் கைத்தரித் தொழில், சமுதாயத் தொழில், மோட்டார்த் தொழில் மின்சாரத்தொழில்போன்ற தொழிலாளர்கள் தங்கள் தங்கள் சங்கத்தினின்று தங்களுக்குரியபிரதிநிதித்வம் சட்டசபையில் விகிதாசாரம் ஒதுக்கிகொடுக்கும்படி அரசியலாரை கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் சங்கக் கூட்டங்களில் நிறைவேற்றி சென்னை சர்க்காருக்கும் மத்தியசர்க்காருக்கும் ஒவ்வொரு மாகாணக் காங்கிரஸ் கமிட்டி தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கவும். தீர்மானங்கள் போட்டு அனுப்பினல் நமது இதழிலும் பிரசுரித்து ஆவன செய்ய முயலப்படும். —ஆசிரியர்

ஃ ஃ ஃ

உடையார்பாளையம் தாலுகா பஸ் பிரயாணிகள் சங்கக்கூட்டம்.

28—10—50 மாலை 6-30மணிக்கு டி சங்கத்தின் நிர்வாகக்கமிட்டிகூட்டம் தலைவர் திரு. எஸ். எஸ். ஆர். சிவகுருநாதன் அவர்கள் இல்லத்தில் கூடி அடியிற் கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியது.

1. நமது ஜில்லாவிலுள்ள பஸ் போகிற எல்லா கிராமாந்திர ரோடுகளையும் நல்ல முறையில் சீர் திருத்தியும் பல பெரிய ஓடைகளுக்கு பாலம்கட்டியும் சிறிய ஓடைகளுக்கு குழாய்பாலம் போட்டும் மண் ரோடுகளுக்கெல்லாம் சரளைக்கல் போட்டும் துரிதமாக பாதைகளைச் செப்பனிட்ட ஹைவே ஸ் டிவிஷனல் இன்ஜினியர் திரு. ஞானப்பிரகாசம் அவர்களுக்கும் திருச்சி ஜில்லா போர்டு தலைவர் திரு. ராஜாசிதம்பர ரெட்டியார் அவர்களுக்கும் கூட்டம் நன்றிசெலுத்தி அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறது.

2. செந்துரையிலிருந்து ஜெயங்கொண்டம் போகவும் ஜெயங்கொண்டமிருந்து மதனத்தூர்போகவும் பிரயாணிகள் அதிகமிருப்பதால் தற்சமயம் போய்க் கொண்டிருக்கும் ஒவ்வொரு பஸ் போராததாகையால் இன்னும் ஒரு பஸ் விடவேண்டுமென்று பலதடவைகள் தீர்மானம் போட்டனுப்பியும் மேலதிகாரிகள் கவனிக்காமலிருப்பதுபற்றியும் ஒரு R. T. O. கூட்டத்தில் இதை நிராகரித்து விட்டதுபற்றியும் கூட்டம் மிகவருந்துகிறது.

3. தற்சமயம் அணைக்கரைக்குபோய்க்கொண்டிருந்த "செல்வம் மோட்டார் சர்வீஸ்" யாதுகாரணம்பற்றியோ நின்றுவிட்டபடியால் அணைக்கரை கும்பகோணம்போகும் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் ஆகையால் அதற்குப்பதில் வேறு ஏதாவது ஒரு பஸ்ஸுக்கு பர்மிட் கொடுத்து பிரயாணிகளுக்கு சௌகரியம் செய்யும்படி R. T. O. அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

4. இங்கிருந்து கும்பகோ[illegible] கோணமிருந்து இங்குவரவும் பிரயாண[illegible] சொல்லத்தரமன்று. இதைபல கூட்ட[illegible] வேற்றிய தீர்மானங்கள்முலம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் ஜெயங்கொண்டம் to கும்பகோணம் குறைந்தது அதிகப்படியாக பேஸ்களுக்காவது பர்மிட் கொடுக்கும்படி திருச்சி & தஞ்சாவூர் ஜில்லாகலெக்டர்களை கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

5. இங்கிருந்து சிதம்பரத்துக்கு தினசரி பேஸ்கள் போகின்றன. ஒவ்வொருநாளும் பிரயாணிகள் இடங்கிடைக்காமல்அவதிப்படுகிறார்கள். ஆகையால் இங்கிருந்து சிதம்பரத்துக்கு ஜெயங்கொண்டம் to சிதம்பரம் வயா மீன்சுருட்டி, பேஸ்கள் போவதற்கு பர்மிட் கொடுக்கவேணுமாய் திருச்சி & தென்னாற்காடு ஜில்லா கலெக்ட்டர்களைக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

ஃ ஃ ஃ

நூல் விநியோக குறைகள்.

செந்துரை, ஜெயங்கொண்டம் 2 செண்ட்டர் ஆலோசனைக் கமிட்டி மெம்பர்களும் நூல் வியாபாரிகளும் 23—10—50 காலை 10 மணிக்கு ஜெயங்கொண்டம் தாலுகாபீசில் திருச்சி ஜில்லா டெக்ஸ்டைல் ஆபீசர் அவர்கள் முன்னிலையில் டெக்ஸ்டைல் ஆலோசனைக் கமிட்டியார்களும், வியாபாரிகளும் கூடி நடந்த கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

1. உ. தாலுகாவில் உள்ள 80 நெ. தறிகளையும் 20 நெ. தறிகளையும் பிரித்து எல்லா வியாபாரிகளுக்கும் சமமாய் விநியோகம் செய்யும்படியும்.

2. அக்டோபர் கோட்டா நாமினியிடம் உள்ள வெள்ளை நூல்களை 20 முதல் 40 வரை உள்ள பேல்கள் 40 யும் வியாபாரிகளுக்கு சம விநியோகம் செய்யும்படிக்கும் சர்க்காரால் பிரித்துக்கொடுக்கப்பட்டுள்ள அளவு நூலானது குறைவாயிருப்பதால் உடன் அடுத்து வரும் கோட்டாவையும் சேர்த்து தறிகாரர்களுக்கு பிரிக்க செய்யும்படியும் அத்துடன் கையிருப்பிலுள்ள 60 நெ. நூல் 3 பேல்களையும் 80 நெ. தறிகளுக்கு பிரித்து கொடுப்பதெனவும்.

3. அழகப்பா, பாலமலை ரெங்கநாதர் டெப்போக்களில் நூல் அதிகமாயிருப்பதாய் தெரிவதால் எவ்வளவு நம் தாலுக்காவுக்கு கிடைக்குமோ அதை வாங்கி கொடுக்கும்படி T. C. O. அவர்களை கேட்டுக்கொள்கிறது.

4. Low Count தறிகள் 4335 தறிகளுக்கும் பின் வரும் பேல்களையும் சேர்த்து 27—10—50ல் வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு ஜெயங்கொண்டம் ரீடிங்ருமில் கூடும் கூட்டத்தில் தறிகாரர்களுக்கு பிரிப்பதென்றும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketcheri Street, Jayankondacholapuram.